# அப்பா பிதாவே
# செப புத்தகம்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | "விண்ணகத் தந்தை தன் குழந்தைகளோடு உரையாடுகிறார்" | | 1 |
| 2. | நவநாட்களை அனுசரிக்கும் முறைகள் | | |
| | (i) | முதல் நாள் | 3 |
| | (ii) | இரண்டாம் நாள் | 11 |
| | (iii) | மூன்றாம் நாள் | 17 |
| | (iv) | நான்காம் நாள் | 24 |
| | (v) | ஐந்தாம் நாள் | 30 |
| | (vi) | ஆறாம் நாள் | 36 |
| | (vii) | ஏழாம் நாள் | 44 |
| | (viii) | எட்டாம் நாள் | 51 |
| | (ix) | ஒன்பதாம் நாள் | 57 |
| 3. | நித்திய பிதாவின் செபமாலை | | 63 |
| | (i) | துவக்க செபம் | |
| | (ii) | மனஸ்தாப செபம் | |
| | (iii) | கர்த்தர் கற்பித்த செபம் | |
| | (iv) | நம்பிக்கை அறிக்கை | |
| | (v) | தந்தைக்கும் மகனுக்கும் | |
| | (vi) | தூய ஆவியே வாரும் | |
| | (vii) | இறுதி செபம் | |
| | (viii) | தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம் | |
| | (ix) | அப்பா பிதாவின் மன்றாட்டு மாலை | |

**4. அன்னை யூஜீனியா விண்ணகத் தந்தைக்கு ஒப்புக் கொடுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட செபங்கள்**

| | | |
|---|---|---|
| (i) | **அழகிய செபம்** | **82** |
| (ii) | **காலை செபம்** | **82** |
| (iii) | **மாலை செபம்** | **84** |
| (iv) | **இரவு செபம்** | **85** |
| (v) | **குணமளிக்கும் செபம்** | **85** |
| (vi) | **தீய ஆவிகளைக் கட்டும் செபம்** | **86** |
| (vii) | **நித்திய பிதாவாகிய விண்ணகத் தந்தைக்கு நம்மை முழுவதும் அர்ப்பணிக்கும் செபம்** | **87** |
| (viii) | **உடல், மனம், ஆன்மா குணம் பெற செபம்** | **87** |
| (ix) | **இறைவனடி சேர்ந்த நம் உறவினரை தந்தையிடம் ஒப்படைத்து மன்றாடும் செபம்** | **88** |
| (x) | **செபம் செய்வதற்கு முடியாமல் இருக்கும் சூழ்நிலையில் செய்யும் செபம்** | **89** |
| (xi) | **கடின மனம் கொண்ட பாவிகளுக்காக செபம்** | **89** |

# விண்ணகத் தந்தையின் திரு உருவம்

திரு உருவங்கள் என்பது நாம் பக்தியோடும், முழு கவனத்தோடும், செபிப்பதற்கும், ஆழ்ந்த மௌனத்தில் இறைவனை தியானிப்பதற்கும், ஒறுத்தல் முயற்சிகளை முன்னெடுப்பதற்கும், நமக்கு உறுதுணையாக இருக்கும் காரணிகள் ஆகும்.

“பதுவா” நகரைச் சார்ந்த லியா கிளாடியோலா என்பவர்தான், உலகிலேயே முதன்முதலாக இந்த விண்ணகத் தந்தையாகிய “அப்பா பிதாவின்” திருஉருவத்தை உருவாக்கியவர்.

1. விண்ணகத் தந்தையாம் இறைவன், உலகின் எத்திசையிலும் உள்ள மாந்தருக்கு தம் செய்திகளை விடுக்க விரும்புகிறார் என்பதை செவ்வக வடிவமாக உள்ள இப்படத்தின் நான்கு திசைகளும் குறிக்கின்றன.

2. தந்தையின் இதயத்தில் இருக்கும் நீல வண்ணப் பகுதி, அகில உலக மாந்தர் மீதான இறைத் தந்தையின் அன்பின் திட்டத்தைக் குறித்துக் காட்டுகிறது. நாம் அவரது அன்பின் இதயத்தில் சாய்ந்து கொள்ளும் போது, நம்மைப் பாதுகாப்பாக தமது கரங்களால் தாங்கிப் பிடிக்கிறார். “ஆல்பா”, “ஒமேகா” என்ற இரண்டு கிரேக்க எழுத்துக்களும் தொடக்கமும், முடிவுமான வார்த்தையாம் இறைவனைக் குறிக்கின்றன. சிலுவை – தூய்மையான செம்மறியாகிய இயேசு கிறிஸ்துவையும், அழகிய பொன் நிறமானது தந்தையின் நித்தியந்திய பிரசன்னத்தையும் குறிக்கிறது.

3. விண்ணகத் தந்தையின் திரு உருவப்படமானது முழுவதுமாக நம் நேரடி பார்வையில் தெளிவாக தெரியுமளவுக்கு அமைத்திருப்பதன் அர்த்தம் என்னவெனில், தந்தை இறைவன், அறிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் தம்மை வெளிப்படுத்த எப்பொழுதும் தயாராக இருக்கிறார் என்பது தான்.

வானகத் தந்தையின் அரியணையைச் சுற்றிலும் அருகில் உள்ள நீல வானம் விண்ணகப் பிரசன்னத்தைக் குறிக்கிறது. அந்த நீல வானில் பொறிக்கப்பட்டுள்ள பன்னிரண்டு செராபீன்களின் படங்கள், அவர்கள் எப்போதும் இறைவனின் மகிமையைப் போற்றி, தியானித்து, ஆராதித்து, துதிப்பதையும், கடவுளின் மிகவும் பிரமாணிக்கமான தூதுவர்கள் என்பதையும் தெளிவுபடுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

4. விண்ணகத் தந்தையின் தலையைச் சுற்றிலும் ஒரு வெள்ளை நிற வட்டம் இருக்கிறது. அது இறைத்தந்தையின் மகிமையின் ஒளி வெள்ளத்தைக் குறித்துக் காட்டுகிறது. அதில் குறிக்கப்பட்டுள்ள மூன்று குறியீடுகள், அதாவது "omicron", "omega" and "eta" "இருக்கிறவர் நாமே" என்ற பொருளில் எழுதப்பட்டுள்ளது. வழக்கமாக சித்தரிக்கப்படும் தந்தை இறைவனின் உருவப் படங்களில் உள்ளது போல் நீண்ட நரைத்த தாடியை இப்படத்தில் தவிர்த்திருப்பதை நாம் காணமுடிகிறது. இது ஏனென்றால், நரைத்த தாடியும், வயதான உடம்பும், உடலின் மூப்பையும், அழிவையும் குறிப்பதனால், இங்கே தாடியும், நரையும் இல்லாமல் வரையப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், அன்னை யூஜினியாவுக்கு, தம்மைக் காட்சிகளில் வெளிப்படுத்திய விண்ணகத் தந்தையின் முகத்தில் நரைத்த நீண்ட தாடியோ, முதுமையின் அடையாளமோ இல்லை என்பதும், இவ்வாறு நரைத்த தாடியின்றி அவரது முகம் அமைக்க மற்றொரு காரணமாகும்.

5. விண்ணகத் தந்தையின் கருமை நிற தலைமுடி, இறைவனின் மறையுண்மைகளை, மனித மூளையால் அறிந்து கொள்ள முடியாது என்பதை குறித்துக் காட்டுகிறது. தலைமுடியைச் சுற்றி அலங்கரிக்கும் தங்க வண்ணம் பூசப்பட்ட இழையானது, எருசலேம் ஆலயத்தில், இயேசு இறந்த போது கிழிந்த திரைச்சீலையை நினைவூட்டுகிறது என்றால் மிகையாகாது.

6. தந்தையின் அழகிய சிறு உதடுகள் தந்தையின் வாழ்வளிக்கும் உயிர் மூச்சின் சுவாசத்தை நினைவுபடுத்துகின்றன.

7. அழகிய கண்கள் அன்போடும், பாசத்தோடும், கனிவோடும் நம்மை உற்று நோக்குகிறது.

8. அவரின் நீல நிற உள்ளாடை, அவரது தெய்வீகத்தையும், அவர் அணிந்துள்ள சிவப்பு நிற கவசமாகிய மேலாடை அவரது எல்லையற்ற ஞானத்தையும், அளவற்ற அன்பினையும் எடுத்துரைக்கின்றது.

9. மிகவும் எளிமையான பெஞ்சின் மீது அவர் அமர்ந்திருப்பது, நம்மையும் எவ்வித பயமோ தயக்கமோ இன்றி அவர் அருகில் அமர அவர் விரும்புகிறார் என்பதைக் குறித்துக் காட்டுகிறது. அவருடைய இரு பக்கங்களிலும் இருக்கும் இரண்டு மெத்தையால் ஆன இருக்கைகள் (நீலம்) இறைவனும் (சிகப்பு) மனிதனும் அதே இடத்தில் சந்தோஷமாக உரையாடலாம் என்பதை எடுத்துரைக்கிறது.

10. அன்போடு, தாராளமாக ஆசீர்வதிக்கும் வகையில் அகன்று உயர்ந்திருக்கும் அவரது வலக்கரம், “நாம் மனிதர்களைத் தீர்ப்பிட விரும்பவில்லை, மாறாக மீட்கவே விரும்புகிறோம்” என்னும் அவரது திருச்சித்தத்தை வெளிப்படுத்துகிறது.

11. அவரது பாதங்களுக்கிடையே, பூமியில் வைக்கப்பட்டுள்ள நீதியின் அடையாளமான செங்கோல், தாம் மக்கள் மீது நீதித்தீர்ப்பைவிட, இரக்கத்தையே அளிக்க விரும்புவதை வெளிபடுத்துகிறது.

12. அந்த செங்கோலுக்கு அருகிலே தரையிலே வைக்கப்பட்டுள்ள அவரது ராஜ கிரீடம் (அரசு முடி), யார் வேண்டுமானாலும், அச்சமின்றி தன்னை அணுகி வர அழைக்கும் அடையாளமாய் உள்ளது.

13. அவரது பாதங்கள், எழுந்து நடக்கத் தயாராய் இருப்பது போல் உள்ளன. இது, தந்தை எப்போதும் நம்மை நோக்கி வந்து நம்மைச் சந்திக்க விரும்புவதைக் குறிக்கிறது. அவரது பாதங்களையும், தெய்வீக ஒளி வெள்ளம் சூழ்ந்துள்ளது.